TNTP160076972025

Presented on : 23-12-2025
Registered on : 03-01-2026
Decided on : 10-06-2026
Duration : 0 years, 5 months, 18 days

## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இலால்குடி.

முன்னிலை : திரு.சு.அருணாச்சலம், B.E, L.L.B.(Hons),
நீதித்துறை நடுவர்,
இலால்குடி.

2026 ம் ஆண்டு ஜூன் திங்கள் 10 ம் நாள் புதன்கிழமை

## ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 05/2026
## CNR.No. TNTP16-007697-2025

| | | |
|---|---|---|
| குற்றமுறையிடுபவர் | : | அரசுக்காக : காவல் உதவி ஆய்வாளர்,<br>சிறுகனூர் காவல் நிலையம்.<br>குற்ற எண்.128/2025 |
| | | -எதிர்- |
| எதிரியின் பெயரும், விலாசமும் | : | சேகர் வயது 60/25 த.பெ.குமரசாமி, 1/95 நடுத்தெரு, திருப்பட்டூர், மண்ணச்சநல்லூர் தாலுகா, திருச்சி மாவட்டம். |
| எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு | | அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டி வந்து, ஒருவருக்கு மரணத்தை விளைவித்தல் - பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 281, 106(1)ன் கீழ் தண்டிக்கத்தக்கது. |

| | | |
|---|---|---|
| எதிரியின் பதிலுரை | : | குற்றவாளி இல்லை |
| நீதித்துறை நடுவரின் தீர்ப்பு | : | எதிரி பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 281, 106(1)ன் கீழ் குற்றவாளி இல்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. |
| நீதித்துறை நடுவரின் தீர்ப்பு | : | இறுதியாக, எதிரி மீது பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 281, 106(1)ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளின் படி எதிரி குற்றவாளி இல்லை என முடிவு செய்து பாரதிய நியாய சுரக்ஷா சன்ஹிதா பிரிவு 271(1)ன் கீழ் எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |

இவ்வழக்கு 03.01.26–ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் கற்றறிந்த குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை I திருமதி.ஜெயந்தி அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.மணிகண்டன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களையும், இவ்வழக்கு ஆவணங்களையும் ஆய்வு செய்த பின்னர் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>தீர்ப்புரை</u>**

1) அரசு தரப்பு வழக்கானது, கடந்த 04.06.2025 ம் தேதி பிற்பகல் 14.20 மணியளவில் சென்னையிலிருந்து திருச்சி செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் புகார்தாரர் மாரிமுத்து என்பவரின் தந்தை ராமச்சந்திரன் என்பவரை எதிரி TN 48 AR 7486 என்ற பதிவு எண் கொண்ட Hero

Splendor என்ற இரு சக்கர வாகனத்தில் பின்னால் உட்கார வைத்து கொண்டு கொணலை GRT மேன்சன் அருகில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ரோட்டின் எதிர் திசையில் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி சென்று கீழே விழுந்து விபத்தை ஏற்படுத்தி ராமச்சந்திரன் என்பவருக்கு இறப்பை ஏற்படுத்தியதாக, எதிரி மீது பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 281, 106(1)ன் கீழ் சிறுகனூர் காவல் உதவி ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) இவ்வழக்கானது ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.05/2026 ஆக இந்நீதிமன்றத்தில் கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இவ்வழக்கின் எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானபோது, அரசு தரப்பில் தாக்கலான ஆவணங்களின் நகல்கள் யாவும் பாரதிய நியாய சுரக்ஷா சன்ஹிதா பிரிவு 230–ன் படி இலவசமாக வழங்கப்பட்டது. போதிய கால அவகாசம் வழங்கப்பட்டது. ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்ததில், எதிரி குற்றம் புரிந்திருப்பதற்கான முகாந்திரம் இருந்ததால் எதிரியின் மீது பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 281, 106(1)ன் கீழ் குற்றச்சாட்டு குறித்து வனைந்து விளக்கிக் கூற எதிரி தான் குற்றவாளி அல்ல என்று கூறினார். எனவே, அரசு தரப்பில் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

3) எதிரி மீதான குற்றச்சாட்டை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**<u>4. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு :</u>**

4.1) அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 04.06.2025 ம் தேதி மதியம் 12 மணியளவில் தான் வீட்டில் இருந்தபோது, தனது நண்பர் போன் செய்து தனது அப்பா கீழே விழுந்துவிட்டதாக சொன்னார் என்றும், தகவல் கேள்விபட்டு இருங்களூர் SRM மருத்துவமனை சென்று தனது அப்பாவை பார்த்தபோது அவர் இறந்துவிட்டார் என்றும், தனது அப்பா நடந்து சென்றபோது வண்டி அவர் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக கேள்விபட்டேன் என்றும், வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது என்றும், அதன்பிறகு சிறுகனூர் காவல் நிலையம் சென்றபோது, போலீசார் எழுதப்படாத வெள்ளை பேப்பரில் கையொப்பம் பெற்றுக் கொண்டனர் என்றும், தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

4.2) அ.சா.2 தனது சாட்சியத்தில், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், சுமார் ஒரு வருடங்களுக்கு முன்பு தேதி, மாதம் தற்போது ஞாபகமில்லை என்றும், மாலை சுமார் 5 மணியளவில் சிறுகனூர் காவல் நிலையம் சென்றபோது போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க மேற்படி கையெழுத்தை தான் போட்டுக் கொடுத்தேன் என்றும், அந்த கையெழுத்தை தான் எதற்காக போட்டுக் கொடுத்தேன் என்று தனக்கு தெரியாது என்றும் சாட்சியமளித்துள்ளனர்.

4.3) அ.சா.3 தனது சாட்சியத்தில், கடந்த 04.06.2025–ம் தேதி சிறுகனூர் காவல் நிலைய உதவி ஆய்வாளராக முருகையன் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்த போது மாரிமுத்து என்பவர் நிலையம் ஆஜராகி

கொடுத்த புகாரை பெற்று வழக்கு பதிவு செய்துள்ளார் என்றும், பதிவு செய்யப்பட்ட வழக்கு கோப்பினை விசாரணைக்காக காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்துள்ளார் என்றும், காவல் ஆய்வாளர் குணசேகரன் என்பவர் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 04.06.2025 ம் தேதி 22.30 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் பாரதிசிவம், ரகுராத் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்துள்ளார் என்றும், கடந்த 05.06.2025 ம் தேதி காலை 9 மணியளவில் SRM மருத்துவமனை சவக்கிடங்கு சென்று அங்கு இவ்வழக்கில் இறந்துபோன ராமச்சந்திரன் என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டுள்ளார் என்றும், பின்னிட்டு இவ்வழக்கில் இறந்துபோன நபரின் பிரேதத்தினை பிரேத பரிசோதனைக்காக காவலர் சாதிக் பாட்ஷா என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதம் அனுப்பி வைத்துள்ளார் என்றும், பின்பு பட்டியல் சாட்சிகளான 1 முதல் 5 வரை தனித்தனியாக விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், சாட்சிகளின் விசாரணையிலிருந்து சம்பவம் உண்மை என்று தெரிய வந்ததால் இவ்வழக்கின் எதிரியை தேடி வந்த நிலையில் 16.06.2025 அன்று 14.00 மணிக்கு நிலையத்தில் ஆஜரான எதிரியை குற்ற காரணம் கூறி கைது செய்து நிலைய பிணையில் விடுவித்துள்ளார் என்றும், இவ்வழக்கில் விபத்தில் சம்பந்தப்பட்ட TN 48 AR 7486 வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளர் அருண்குமார் என்பவருக்கு அனுப்பி வைத்து வாக்குமூலம் பதிவு செய்து தணிக்கை சான்று பெற்றுள்ளார் என்றும், இவ்வழக்கில் இறந்துபோன ராமச்சந்திரன்

என்பவருக்கு SRM மருத்துவமனையில் விபத்து பதிவேடு பதிவு செய்த மருத்துவர் சந்திரமோகன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை மேற்கொண்ட மருத்துவர் சுதா என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றுள்ளார் என்றும், இவ்வழக்கில் பட்டியல் சாட்சியான 11, 12 யை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், அவருடைய வழக்கு விசாரணையை முடித்து எதிரி மீதான குற்றத்திற்கு போதிய ஆதாரம் இருந்ததால் எதிரி மீது பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 281, 106(1)ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார் என இவ்வழக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் முருகையன் மற்றும் புலன் விசாரணை அதிகாரியான காவல் ஆய்வாளர் குணசேகரன் என்பவர்களுக்கு பதிலாக சாட்சியமளித்துள்ளார்.

5) அரசு தரப்பு சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமாக தோன்றியவற்றை குறித்து எதிரியிடம் பாரதிய நியாய சுரக்ஷா சன்ஹிதா பிரிவு 351(1)(ஆ)–ன் படி வினவியபோது அவற்றை பொய் எனக்கூறி மறுத்தார். எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

6) இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது யாதெனில், எதிரி மீதான குற்றச்சாட்டான பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 281, 106(1) அரசு தரப்பால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பது தான்.

**<u>தீர்வு:–</u>**

7) இவ்வழக்கின் கோப்புகள் ஆராய்ந்து பார்க்கப்பட்டு இருதரப்பு

வாதங்களும் கேட்கப்பட்டது. அரசு தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சியங்கள், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் ஆகியவற்றின் அடிப்படையில், எதிரி மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், ஆகவே எதிரிக்கு தகுந்த தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றும் வாதிட்டார்.

8) எதிரி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர், தனது வாதத்தில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகிய சாட்சிகள் பிறழ் சாட்சிகளாக மாறிவிட்டதால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு சாதகமாக்கி எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

9) அரசு தரப்பு, சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்ததில், இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகள் யாரும் இல்லை. இவ்வழக்கானது முற்றிலும் சூழ்நிலை சாட்சியங்களையே அடிப்படையாக கொண்டுள்ளது.

10) அ.சா.1 புகார்தாரர் தனது முதல் விசாரணையில் விபத்து சம்பவம் குறித்து தனக்கு போன் மூலம் தகவல் கிடைத்ததை பற்றி சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1ன் சாட்சியத்திலிருந்து அ.சா.1 சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என தெரியவருகிறது. அ.சா.1 இவ்வழக்கில் கேள்விப்பட்ட சாட்சி ஆவார். மேலும் அ.சா.1 தனது சாட்சியத்தில் தான் சிறுகனூர் காவல் நிலையம் சென்றபோது, போலிசார் தன்னிடம் வெள்ளை பேப்பரில் கையொப்பம் பெற்றுக்கொண்டனர் என சாட்சியமளித்து பிறழ் சாட்சியாகி அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை.

11) பார்வை மகஜர் சாட்சியான அ.சா.2 தனது சாட்சியத்தில், போலிசார்

கேட்டுக்கொண்டதற்கிணங்க பார்வை மகஜரில் கையொப்பம் போட்டுக்கொடுத்ததாகவும், அந்த கையொப்பம் எதற்காக போட்டுக்கொடுத்தேன் என்று தெரியாது என்று சாட்சியமளித்து பிறழ் சாட்சியாகிவிட்டார்.

12) அ.சா.3 தனது சாட்சியத்தில், கடந்த 04.06.2025–ம் தேதி சிறுகனூர் காவல் நிலைய உதவி ஆய்வாளராக முருகையன் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்த போது மாரிமுத்து என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று வழக்கு பதிவு செய்துள்ளார் என்றும், பதிவு செய்யப்பட்ட வழக்கு கோப்பினை விசாரணைக்காக காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்துள்ளார் என்றும், காவல் ஆய்வாளர் குணசேகரன் என்பவர் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 04.06.2025 ம் தேதி 22.30 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் பாரதிசிவம், ரகுராத் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்துள்ளார் என்றும், கடந்த 05.06.2025ம் தேதி காலை 9 மணியளவில் SRM மருத்துவமனை சவக்கிடங்கு சென்று அங்கு இவ்வழக்கில் இறந்துபோன ராமச்சந்திரன் என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டுள்ளார் என்றும், பின்னிட்டு இவ்வழக்கில் இறந்துபோன நபரின் பிரேதத்தினை பிரேத பரிசோதனைக்காக காவலர் சாதிக் பாட்ஷா என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதம் அனுப்பி வைத்துள்ளார் என்றும், பின்பு பட்டியல் சாட்சிகளான 1 முதல் 5 வரை தனித்தனியாக விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், சாட்சிகளின் விசாரணையிலிருந்து சம்பவம் உண்மை என்று

தெரிய வந்ததால் இவ்வழக்கின் எதிரியை தேடி வந்த நிலையில் 16.06.2025 அன்று 14.00 மணிக்கு நிலையத்தில் ஆஜரான எதிரியை குற்ற காரணம் கூறி கைது செய்து நிலைய பிணையில் விடுவித்துள்ளார் என்றும், இவ்வழக்கில் விபத்தில் சம்பந்தப்பட்ட TN 48 AR 7486 வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளர் அருண்குமார் என்பவருக்கு அனுப்பி வைத்து வாக்குமூலம் பதிவு செய்து தணிக்கை சான்று பெற்றுள்ளார் என்றும், இவ்வழக்கில் இறந்துபோன ராமச்சந்திரன் என்பவருக்கு SRM மருத்துவமனையில் விபத்து பதிவேடு பதிவு செய்த மருத்துவர் சந்திரமோகன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை மேற்கொண்ட மருத்துவர் சுதா என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றுள்ளார் என்றும், இவ்வழக்கில் பட்டியல் சாட்சியான 11, 12 யை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், அவருடைய வழக்கு விசாரணையை முடித்து எதிரி மீதான குற்றத்திற்கு போதிய ஆதாரம் இருந்ததால் எதிரி மீது பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 281, 106(1)ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார் என இவ்வழக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் முருகையன் மற்றும் புலன் விசாரணை அதிகாரியான காவல் ஆய்வாளர் குணசேகரன் என்பவர்களுக்கு பதிலாக சாட்சியமளித்துள்ளார்.

13) இவ்வழக்கில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகிய சாட்சிகள் பிறழ் சாட்சிகளாக மாறி அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியமளிக்கவில்லை. இவ்வழக்கில் எதிரி தான் வழக்கு சம்பவத்தில்

ஈடுப்பட்டதாக எதிரியை அடையாளப்படுத்தும் வகையில் எந்த சாட்சியங்களும் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. கண்ணுற்ற சாட்சிகள் யாரும் இல்லாத நிலையில் சூழ்நிலை சாட்சியங்களின் மூலம் எதிரி கவனக்குறைவாகவோ அல்லது அஜாக்கிரதையாகவோ இரு சக்கர வாகனத்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்தி ராமச்சந்திரன் என்பவருக்கு இறப்பை ஏற்படுத்தினார் என அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை. எனவே, புலன் விசாரணை அதிகாரி எதிரிக்கு எதிராக சாட்சியமளித்து இருந்தாலும், சூழ்நிலை சாட்சிகள் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியமளிக்காத நிலையில், புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் கொண்டு எதிரியை குற்றவாளி என தீர்மானிக்க முடியாது.

14) ஆகவே, அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லை என முடிவு செய்து எதிரி குற்றவாளி அல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**15) இறுதியாக,**

எதிரியின் மீது பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 281, 106(1)ன் கீழ், சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளின்படி எதிரி குற்றவாளி இல்லை என முடிவு செய்து பாரதிய நியாய சுரக்ஷா சன்ஹிதா பிரிவு 271(1)ன் கீழ் எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர்

என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 2026–ம் ஆண்டு ஜூன் திங்கள் 10–ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.06.10 10:27:18 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி.

**அனுபந்தம்**

**அரசு தரப்பு சாட்சிகள்:–**

| | |
|---|---|
| அ.சா.1 | மாரிமுத்து |
| அ.சா.2 | ரகுநாத் |
| அ.சா.3 | முத்துசாமி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:–**

Judicial Form No.68

| S.No of the exhibit | Description of the exhibit and its date | Date,When the exhibit was filed in the case | How marked | By Whom filed | Remarks |
|---|---|---|---|---|---|
| 1. | புகார் மனுவிலுள்ள அ.சா.1 ன் கையொப்பம் | 01.06.26 | அ.சா.ஆ.1 | அ.சா.1 | அசல் |
| 2. | பார்வை மகஜரிலுள்ள அ.சா.2 ன் கையொப்பம் | 01.06.26 | அ.சா.ஆ.2 | அ.சா.2 | அசல் |
| 3. | புகார் | 04.06.26 | அ.சா.ஆ.3 | அ.சா.3 | அசல் |
| 4. | முதல் தகவல் அறிக்கை | 04.06.26 | அ.சா.ஆ.4 | அ.சா.3 | அசல் |
| 5. | பார்வை மகஜர் | 04.06.26 | அ.சா.ஆ.5 | அ.சா.3 | அசல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6. | மாதிரி வரைபடம் | 04.06.26 | அ.சா.ஆ.6 | அ.சா.3 | அசல் |
| 7. | பிரேத விசாரணை அறிக்கை | 04.06.26 | அ.சா.ஆ.7 | அ.சா.3 | அசல் |
| 8. | வாகன தணிக்கை சான்று | 04.06.26 | அ.சா.ஆ.8 | அ.சா.3 | அசல் |
| 9. | பிரேத பரிசோதனை அறிக்கை | 04.06.26 | அ.சா.ஆ.9 | அ.சா.3 | அசல் |

**சான்று பொருட்கள்:-**

இல்லை

**எதிரி தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள், சான்று பொருள்:-**

இல்லை

ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.06.10 10:27:08 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி.

**குறிப்பு:-**

1. வழக்கின் முடிவு காவல்நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டது.
2. வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார்.
3. எந்தவொரு சாட்சியும் மூன்று வாய்தாக்களுக்கு மேல் விசாரிக்காமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
4. இவ்வழக்கின் எதிரி மீது பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 281, 106(1)ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளின் படி எதிரி குற்றவாளி இல்லை என முடிவு செய்து பாரதிய நியாய சுரக்ஷா சன்ஹிதா பிரிவு 271(1)ன் கீழ் எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

/உண்மை நகல்/

ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.06.10 10:27:23 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி.